3111

எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும்

அலறி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எல்.எம்.றிபாஸ்
சட்டத்தரணி
பிரசித்தநொத்தாரிஸ்
077 9351334
071 6356564

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. 23052

திருப் பணைத்தாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும்

அலறி

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

புதுப்புனைவு இலக்கிய வட்டம்
மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல்லாப்பூக்களும் உதிர்ந்துவிடும்' கவிதைகள்
அலறி

ஆசிரியர்	:	அலறி (அ.ல. முஹம்மது றிபாஸ்)©
முதற்பதிப்பு	:	2008, மாசி
வெளியீடு	:	புதுப்புனைவு இலக்கிய வட்டம், மருதமுனை.
கனணி தட்டச்சு	:	என். சாமில்
அட்டை வடிவமைப்பு	:	என். சாமில்
தொடர்புக்கு	:	#339, மக்காமடி வீதி, மருதமுனை - 32314, இலங்கை
தொ.பேசி	:	+94 602671943, +94 716356564
மின்னஞ்சல்	:	zeenath.rifas@yahoo.com
பக்கங்கள்	:	52
விலை	:	Rs. 130

ELLA POOKAZHUM UTHIRNTHUVIDUM: Poems
ALRI

Author	:	Alri (A.L. Mohamed Rifas)©
First Edition	:	2008, February
Published by	:	Puthupunaivu Ilakkiya vattam, Maruthamunai.
Typing	:	N. Shamil
Cover Design	:	N. Shamil
Contact	:	#339, Makkamady Road, Maruthamunai - 32314, Sri Lanka.
T. phone	:	+94 602671943, +94 716356564
Email	:	zeenath.rifas@yahoo.com
Designing, Layout	:	*Lastman advertising,* 077 3288897, 077 6183821, 071 4333188 www.lastmanadvertising.blogspot.com lastmanadvertisng@gmail.com
Printed by	:	New Selection, Akkaraipattu 067 22 78855

வரவுப் பதிவு எண்	23052
வகுப்பு எண்	894.811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

உ. சேரன்
எம். பௌஸர்
இருவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

Dr. எஸ். சிவதாஸ்

என். தேவமுரளி

பஹீமா ஜஹான்

புதுவை இளவேனில்

அப்துல் றஸாக்

உயிர்மை

கலைமுகம்

தீராநதி

பெருவெளி

உயிர் எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை

நிர்மலான வானத்தில்
மழைமேகங்கள்
நட்சத்திரக் கூட்டம்
கரிய பறவைகள்
எதுவுமில்லை
ஒரே ஒரு நிலா
கடலை வெறித்த வண்ணமிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

பூ(ம்) பறவை 01

பூக்களை ரசிக்கும் போது
அவள் கண்கள் விரிந்திருப்பதை
பறவைகள் பற்றிப் பேசும் போது
அவள் உதடுகள் சிறகடிப்பதை
பலமுறை கண்டிருக்கிறேன்.

பறவைகளின் மொழியில்
சொற்கள் கலந்திருப்பதாகவும்
பூக்களின் வண்ணத்தில்
மேனி மினுங்குவதாகவும்
சொல்லும் போதெல்லாம்
கானகமாகி காற்றில் மிதப்பாள்

தான் வரைந்த பறவை
பறந்துவிடக்கூடாதென்பதற்காக
படத்தைச் சுற்றிச் சட்டமும்
மேசைமீது வைத்திருக்கும் சாடிப்பூக்கள்
உதிர்ந்து விடக்கூடாதென்பதற்காக
வலையும் பின்னியிருந்தாள்

பூக்களும், பறவைகளும் குதுகலிக்கும்
காலைப்பொழுதொன்றில்
காணச்சென்றிருந்தேன்
அங்கவளைக் காணவில்லை
தோட்டத்தில் பூவாய் பூத்திருக்கவேண்டும்
அல்லது
பறவையாகி எங்கோ பறந்திருக்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தை உலா

நத்தைகளுக்கு
உலகைச் சுற்றும்
ஆசை ஏற்பட்டிருக்கக் கூடாது

மெத்தை விட்டிறங்கிய
நத்தைகள்
செத்தைகளுக்குச் செல்லாமல்
நேராக கடற்கரைக்கு சென்றிருக்கின்றன

அங்கு
கரை தட்டிய கப்பலொன்றில்
ஏறியபடி
ஆழ்கடலை
அதற்கப்பாலுள்ள தீவுகளைக் கடந்து
வேறுகரைக்குச் சென்றிருக்கின்றன

இனி அவை
ஊர் திரும்புவதானால்
ஒரு யுகம் தேவைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தக் குறிப்புகள் - III

I

இரத்தக் கறைகளுடன்
தூக்கிச் செல்கிறார்கள்
போர் வீரர்களை
காயப்பட்டபடியே கிடக்கிறது
யுத்தகளம்

II

இருபக்கமும்
இறப்புக்கள்
இழப்புக்கள்
காயங்கள்
வெற்றி தோல்வி பற்றி
வினவுகிறது
களத்திடம் யுத்தம்

III

கடற்படை
காலாட்படை
விமானப்படை
முப்படைகளும்
போருக்குத் தயாராகின்றன
யுத்தம் தொடங்கக் கூடாது
என்ற பிரார்த்தனையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் திணறல்

புல்லாங்குழல் இசையில்
நதி உறங்க
மீன்கள் துள்ள
பூக்கள் கண்ணயர
காற்று மட்டும்
மூச்சுத் திணறி வெளியேறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களின் அகாலம்

1

வண்ணத்துப்பூச்சிகள்
மற்றும் வண்டுகளின் கண்களுக்கு
மறைந்து
விரிந்திருக்கின்றன பூக்கள்.
எங்கிருந்தோ வந்து
நறுமணத்துடன் பூக்களையும்
திருடிச் செல்கிறது காற்று

2

வெகு தொலைவில் பூத்திருக்கிறது
அந்தப் பூ
நறுமணத்துக்காக அலைகிறது
காற்று
மகரந்த மணிகளுக்காக விரைகின்றன
வண்ணத்துப்பூச்சிகள்
தேனுக்காக செல்கின்றன
தேனீக்கள்
எல்லாம்
உதிர்வதற்கு சற்று முன் வரைதான்

3

ஆவாரம்பூ
மல்லிகைப்பூ
முல்லைப்பூ
காட்டுப்பூ
எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும்
உப்புப்போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சாத்துணைப் பகுதி

தனிமைத்துணை

தனிமையை விரட்டும்
நோக்கில்
நண்பர்களைக் காண
கடற்கரைக்கு சென்றிருந்தேன்

நண்பர்கள் எவரும்
வந்திராததால்
தனிமையே துணைக்கழைக்க
வேண்டியதாயிற்று

நெடுமணல் வெளியில்
காலாற நடந்து
அலைகளில் கால் நனைத்து
திரிந்தோம்
சிறிது நேரம்

பின்
நண்பர்களை சந்தித்து
உறவாடும் வரைக்கும்
கரையில் உட்கார்ந்திருந்தோம்
தனிமையும் நானும்
தனித்தனியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

பறவைப்பாடல்

1.
பறந்து வந்த பாதையை
ஆகாயத்தில்
தேடிச்சென்றன
சில பறவைகள்

11.
உதிர்ந்து கிடக்கும் இறகுகளில்
உயிர் வாழ்கிறது
செத்துப்போன பறவை

111.
இரைதேடிப் பறந்த பறவை
இரையானது
கூட்டை விட்டுப் பறந்த பறவை
கூண்டில் அடைபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

செருப்புகள்

நடந்து நடந்து
களைத்த போது
கால்களை மாற்றிக் கொண்டன
செருப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ(ம்) பறவை 02

[stamp]

பூக்களைப் போல சிரித்து மகிழ்ந்து
பறவைகள் போல சுற்றித் திரிந்து
தனியாய்
வாழ்ந்து வருபவள்

கூட்டில் குருவியினங்களையும்
முற்றத்தில் மலர்ச் செடிகளையும்
வளர்த்து வருகிறாள்

பூக்களின் முகமலர்வில்
விடியலைத் தொடங்குபவள்
பறவைகளின் மெல்லிய பாடல்களுடன்
இரவை முடிக்கிறாள்

இப்படியே வாழ்வை
பூம் பறவையாய் கழிப்பவள்
இறந்து போகும் ஒரு நாளில்

எப்படி உதிரும்
அவள் வீட்டுப் பூக்கள்
எங்கே பறக்கும்
அவளை விட்டும் பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

இந்தக் கோடையில்

இந்தக் கோடையில்
இப்படித்தான்
முற்றத்தை விட்டு காற்றுச் செல்கிறது
நதியை விட்டு நீர் செல்கிறது
வெக்கையை விட்டு வெயில் செல்கிறது
இந்தக் கோடையில்
இப்படியேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

புதுமொழி

மொழியை அகழ்ந்து
ஆழத்திற்கு செல்கிறேன்
எழுத்து
வாக்கியம்
வசனம்
சொற்றொடரென விரிவுகொள்கிறது
இன்னும் ஆழத்திற்குச் செல்லவே
புது மொழியொன்று உருவாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

நிற்கமுடியாமல்

நெடுஞ்சாலையோரத்து
நிழல் விருட்சம்
விபத்துக்களில்
நடுங்கி
கிளைவெட்டும் மின்சார சபைக்கு
அஞ்சி
வழிப்போக்கர்களின் குறட்டை ஒலியில்
திடுக்கிட்டு
காக்கையின் எச்சத்தில் கரைந்து
காய்க்கும் காலங்களில்
கல்லெறிபட்டு
நிற்கமுடியாமல்
நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

உசாத்துணைப் பகுதி

நாகரீகம் வளர்ந்த கதை

காட்டில் அலைந்த குரங்குகள்
ஏதோவொரு திசையில்
ஏதோவொரு பிரதேசத்தில்
ஆடைகள் அணிந்த மனிதர்களைக் கண்டன
பலபல வண்ணங்களில்
பலபல கோலங்களில்
ஆடைகளைக் கண்டு
ஆசையும் வெட்கமும் கொண்டு
ஆடைகளைத் திருடி அவைகள் அணிந்தன
பின்
காட்டில் அலைந்த மனிதர்கள்
ஏதோவொரு திசையில்
ஏதேவொரு பிரதேசத்தில்
ஆடைகள் அணிந்த குரங்குகளைக் கண்டனர்
பலபல வண்ணங்களில்
பலபல கோலங்களில்
ஆடைகளைக் கண்டு
ஆசையும் வெட்கமும் கொண்டு
ஆடைகளைக் களைந்து
அவர்கள் அணிந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

திருடன்

பூட்டப்பட்டிருக்கும் வீட்டின்
கதவுகள்
ஜன்னல்கள்
அலுமாரிகள்
திறந்திருக்கின்றன
காவலர் கண்ணில் படாமல்
இருளின் வெளிச்சத்தில்
திருடனொருவன்
உள் நுழைகின்றான்
திருடிய நகைகளை
திருப்பி வைத்துச் செல்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

கடலை வரைபவன்

கப்பலில் அமர்ந்து
கடலை வரைபவன்
நீரை
நீளத்தை
நீலத்தை
வரைந்து
அலைகளை
அவற்றின் சீற்றத்தை
வரைகையில்
அலைகள் குமுறியெழுந்து
அடிக்கத் தொடங்கியதும்
கடற் கோளெனப் பயந்து
கரை சேர்கிறான்
கடலை மடித்து
கப்பலில் விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களின் மூன்று வாசிப்பு

1.

மாபெரும் நூலகமொன்றில்
புத்தகங்களில்
அறிஞர்களும், கலைஞர்களும்
அரசியல் வாதிகளும்
வாழ்ந்து வந்தனர்.

திடிரென வெடித்த
கலவரமொன்றில்
நூலகம் எரிக்கப்பட
அவர்களில்
சிலர் தப்பிவிட
பலர் எரிக்கப்பட்டனர்.

தீயணைந்து சில நாட்களில்
பெய்த பெரும் மழை
எரிக்கப்பட்டவர்களின் சாம்பலை
கடலில் கரைத்துவிட
தப்பியவர்கள்
நூல்களை விட்டு
வெளியேற முடியாமல்
வேறொரு நூலகத்தில்
வாழ்ந்து வருகின்றனர்.

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.
மூடப்பட்டிருக்கும்
சில மனிதர்களின்
வாழ்வு
புத்தகங்களில்
திறக்கப்படுகிறது.

3.
புத்தகமொன்றை
வாசிக்கும் வாசகன்
அப்புத்தகத்தில்
கதையுடன் ஒன்றித்த கவிஞன்
பக்கமொன்றை
தொலைத்துவிட்டு
பரபரப்புடன்
முன்னும் பின்னும் புரட்டி
கண்டுபிடிக்க முடியாமல்
புத்தகத்தை மூடிட
கவிஞனுடன் ஒன்றித்த வாசகன்
பரபரப்புடன்
வாசித்த பக்கத்தை
தொலைத்து விடுகிறான்
கவிஞனை போல
புத்தகத்தை மூடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவில்

கடல்
நீலத்தை
காடு
பச்சையை
உறிஞ்சிய பின்
வண்ணமிழந்தது
வானவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மனம்

1.
'ஊருக்கு ரயில்
ஏன் வருவதில்லை'
எனக் கேட்டாள்
சிறுமி
'இரும்புபாதை இல்லாததால்'
என்றேன்.

'அப்ப விமானம் எப்படி வருது'
திருப்பிக் கேட்டாள்
'இரும்பு பாதை இல்லாததால்'
என்றேன்
மீண்டும்

2.
இருள் கவியும் மாலை
காட்டும் வழிப்பாதை
பஸ்ஸுக்குள் சிணுங்கியபடி
யானை காட்டுமாறு
அடம்பிடித்தாள் குழந்தை
எருமைகளை காட்டி
யானைகள் என்றேன்
யானைகள் எருமைகள் போல
இருக்குமா?
திருப்பிக் கேட்டாள்
என்னிடம்.

(ஸீனத் செல்வத்திற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

மழைக் குடை

பூனைபோல பதுங்கி வந்து
பெய்யத் தொடங்கியது
பெரும் மழை
கொடியில் உலர்த்திய ஆடைகள்
விறகுக்கட்டைகள்
வாசலில் பரப்பிய நெல்மணிகள்
எல்லாவற்றையும்
அள்ளியெடுத்து உள்வந்த நான்
வெயிலுக்குப்பிடித்த குடையை
மடக்கி
வெளியில் வைத்துவிட்டேன்
விரித்துப்பிடித்து
வீட்டுக்குள் வரத்தெரியாதது
நனைந்து கொண்டிருக்கிறது
மழையில்

23052

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை

*எலிகள் பெருக
பூனை வளர்த்தான்
பூனைகள் பெருக
எதை வளர்ப்பான்?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

பூக்கள்

உசாத்துணைப் பகுதி

பேரலைகள்
குழந்தைகள் பள்ளியின்
கதிரைகள்
மேசைகள்
புத்தகங்களை
சுருட்டிச் சென்றபோதும்
விட்டுச் சென்றன
சுவரில் வரைந்திருந்த
பூக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு

குருவிகளுடன் பேசியபடி
கைகளை நீட்டி
கால்களை நிமிர்த்தி
ஓய்வெடுக்கிறது
அமர்ந்த மனிதனுக்கும்
அமரப்போகும் மனிதனுக்கும்
இடையில்
நாற்காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

வரண்ட வானம்

மழைபொய்த்த வானம்
நிலம்போல வரண்டு கிடக்கின்றது.
மெல்லெனத்துளிர்க்கும் நட்சத்திரங்கள்
உஷ்ணம் மிகுந்து இலைகளாய்க் கருகும்

கொடியெனப்படரும் மேகங்கள்
பச்சையம் வெளிறி காய்ந்து உதிரும்

கடலாய், ஆறாய், அருவியாய்
நானிலம் நிறைந்து பூரிக்கும்
இந்நாட்களில்
வானம் வெடித்துச் சுருள்வதற்குள்
மழைபெய்ய வேண்டும்
நிலத்திலிருந்து வானத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

உசாத்துணைப் பகுதி

இருப்பு

அலைக்கழித்து
வெளியேற்றிய காற்றை
தன்னிருப்பை
நிச்சயப்படுத்திக் கொள்ள
உள்ளிழுத்துக் கொண்டது
வெற்றிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம்

பூச்சியின் காலில்
ஒட்டியிருக்கும்
மகரந்த மணிக்குள்
இருக்கலாம்
காய், கனி, காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகளை விட

01.

பறவைகளின் குரல் பற்றியதான
கவிதையினை எழுதிக்கொண்டிருந்த போது
ஜன்னலுக்குள்ளே
கீச்சிடும் சத்தம் கேட்டது
எட்டிப்பார்த்துத்தேடுகையில்
எழுதிய கவிதை பாடிக்கொண்டிருந்தது
பறவைகளை விட இனிமையாக

02.

பறவைகளின் இறகுகள் பற்றியதான
கவிதையினை எழுதிக்கொண்டிருந்த போது
ஜன்னலுக்கு வெளியே
சிறகடிக்கும் சத்தம் கேட்டது
எட்டிப்பார்த்துத் திரும்புகையில்
எழுதிய காகிதம் பறந்து கொண்டிருந்தது
பறவைகளை விட வேகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

துணைப் பகுதி

முகம்

ஓராயிரம் முகங்கள்
காட்டிய கண்ணாடி
ஒரு நாள்
உடைந்து காட்டியது
ஒரேயொரு முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

மரணம் வரை

இருப பதிவு

மரணத்திலிருந்து தப்பியவர்
அதிகாலை நடைப் பயிற்சி
அளவான உணவு
அதிக ஓய்வுடன்
ஆரோக்கியம் பேணி
வாழ்கின்றார்
தப்பிக்க முடியாத மரணம் வரைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்கொக்குகள்

மீனுக்காய்க் காத்திருந்த
கொக்குகள்
காணாமல் போயின
ஆற்று மீன்களை
அறுத்த போது
கொக்குகள் பறந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்

கூண்டைத் துறந்த பறவைகள் போல
நகரத்தை வெறுத்து
குடிபெயர முடிவு செய்தனர்
கூடவே
துணிகள் துவைக்க
வோஷிங் மெஷின்
விரைந்து சமைக்க
கேஸ் குக்கர்
பழரசம் அரைக்க Blender
என
நகரத்தை சுருட்டிக் கொண்டு
கிராமத்தை வந்தடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

விலகல்

மரம்
ஏறிடும் வாகை
தேடுகிறான்
மரமேறி
இறக்கிடும் வாகை
தேடுகிறது
மரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பணைக்கரை உ

அது அது

வீட்டை விஸ்தரிக்கும்
யோசனையில்
ஆழ்ந்திருக்கிறான்
சொந்தக்காரன்
வரவேற்பறையை அகலமாக்கினால்
சமையலறை சுருங்கிவிடும்
படுக்கை அறையை
விரிவாக்கினால்
குளியலறை குறுகிவிடும்
ஒன்றில் ஒன்று
குறுகாமல்
வீட்டை விஸ்தரிப்பதெப்படி?
உள்ளது உள்ளபடி இருக்க
அறையொன்றை தூக்கி
வெளியில் வைத்தான்
தானாய் அகண்டது வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

பறத்தலை விட்டு

ஏகமாய் சிறகை விரித்து
இலையிலும் மெலிதாகி
பூக்களின் மேலமர்ந்து திரிந்தது
இதழிலும் எளிதாகி
தோட்டமெங்கும் சுற்றியது
எட்டச் சென்று
தொட்டபோது
பறத்தலை விட்டுப் பறந்தது
பட்டாம்பூச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

இழப்பு

குயிலின் குரலோசை
அணிலின் கீச்சொலி
காகத்தின் பாடல்
ஒருங்கே கேட்டிருந்தேன்
முற்றத்து வேம்பை
வெட்டி வீழ்த்தும்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடியின் இயல்பு

தோட்டத்தில் பிடிங்கி
தொட்டியில் நடப்பட்டிருக்கும்
செடிக்கு
நீரும் நிழலும்
ஒளியும் வளியும்
படரக் கொடிக்கம்பும்
கிடைக்கச் செய்கிறேன்
எனினும்
வளர்வதானால் அதற்கு
தோட்டம்தான் வேண்டுமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடையின் வெம்மை

கோடையின் வெம்மை அறியாமல்
பூக்களில் வாசத்தை
ஊரெல்லாம் தெளிக்கப் புறப்பட்டு
இறுகிய ஆடைகளுக்குள்
கட்டிடக் காடுகளில்
தரிசாக்கப்பட்ட வெளியெல்லாம்
அலைந்து திரிந்து
வியர்த்துக் களைத்து
சற்றே இளைப்பாற
காற்றாடி முன் அமர்ந்திருக்கிறது
காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

பாறைகள்

பாறைகள்
நத்தை வடிவப் பாறைகள்
எப்படி உருவாகி இருக்கும்
கோடி ஆண்டுகள்
ஓடுகள் உக்கி
உருண்டு திரண்டு
உருமாறியிருக்கு(ம்)மோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

நிலவின் சப்தம்

இரவு
நிலவின் தாளத்தில்
உறங்கிய நதியில்
காலையில்
குளிக்கும் போதும்
கேட்டது
நிலவின் சப்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

யாருமில்லா இடம்

யாரும், யாருமே வராத
இடமொன்றுக்கு
செல்ல வேண்டும்.
அது
அடர்வனமாக
மலை உச்சியாக
இருள் குகையாக
எதுவாகவும் இருக்கட்டும்
யாருமே வரக்கூடாது
ஒரே ஒரு சிக்கல்
என்னை விட்டுவிட்டு
எப்படிச் செல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்புகள்

பாதை கடக்கும் அவசரத்தில்
அடிபட்டு
நொண்டிச் செல்கின்றன
எறும்புகள்
என்ன ஆனதோ
எலும்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி

கண்களை திறந்தால்
நிலம் பிளக்கும்
சக்தி கொண்ட முனிவர்கள்
கடல் சூழ் தீவொன்றில்
தவம் செய்து வந்தனர்
தீவு வாசிகளை
பூமி விழுங்கிவிடக் கூடாதென்பதற்காக
கண்களை மூடிய வண்ணம்
காலமெல்லாம் தவமிருந்தனர்
எதிர்பாரா இரவொன்றில்
கடல் பெருகி தீவுக்குள்வரவே
தம்மைக்காக்கும் வழியைத்தேடி
கண்களைத் திறந்தார்கள் முனிவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தம்

எண்ணற்ற மொழிகள் பேசி
எல்லையற்ற திசைகளில் பறந்து
என்னறைக்குள் வந்த பறவைகள்
போகும் போது
விட்டுச் சென்றன
சிறகில் சூடிவந்த வானத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

உன்னில்

ஒவ்வொரு அங்கமாய்
உன்னில்
மூழ்கியபோது
இதழ்களில்
கனியின் சாற்றை
முலைகளில்
இலையின் ருசியை
யோனியில்
பூவின் வாசத்தை
உணர்ந்தேன்
மூழ்கிச் சலித்த பின்
நானே
மரமானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகள்

வீழ்வதெல்லாம்
மர்மக் கொலைகள்
நானே எனக்கஞ்சி
வாழ்கிறேன்

(எஸ்போஸ் - நினைவுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணைக்கூடஉ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பணைக்குரியது

உசாத்துணைப் பகுதி

R. 23052

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எளிய காட்சிகளிலிருந்து
ஆழ்ந்த கவனிப்பைத்
தரவிளைகிறார் அலறி

பின் நவீனத்துவக் கூறுகள் விரியும்
தத்துவச் சாயலைக் கொண்டமைந்த
அவரின் பார்வைகள்
உண்மையும் ஒளிர்வையும் கொண்டவை.

நெகிழ்வான கவிதைமொழி
சிக்கனமான வார்த்தைகள்,
பிரகாசமான அர்த்தச் செறிவை
தொடுவதற்கு பயணிக்கின்றன!'

அனார்

ISBN - 978-955-99400-1-2

Cover : Shamil - Lasumaadvertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org